441

# நமது நாடு

## மூன்றாம் வகுப்பு



…ரிஷர்ஸ்
…ள்ளி-2

TB
031,6 (3)
N66
173895

# நமது நாடு

## மூன்றும் வகுப்பு

MADRAS RECORD OFFICE
MADRAS

ஆக்கியோன் :
அ. அமலோற்பவம், B.A., B.T.,
தே. பிரித்தோ உயர்நிலைப்பள்ளி, தேவகோட்டை.

யுனைட்டெட் பப்ளிஷர்ஸ்
திருச்சிராப்பள்ளி-2
யுனைட்டெட் பப்ளிஷர்ஸ்
தெப்பக்குளம் :: திருச்சிராப்பள்ளி—2.

பதிப்புரிமை] 1966 [விலை பை. 60

முதற் பதிப்பு : 1966.

[ 10.9 கி. கிராம் வெள்ளைத்தாளில் அச்சிடப்பட்டது. ]

173845

## உறுதிமொழி

என்னுடைய தாய் நாடு இந்தியா. இந்தியர்கள் அனைவரும் என் உடன் பிறந்தவர்கள். என் தாய்த் திருநாட்டை நான் உளமார நேசிக்கிறேன். வளமும், வேறு பாடும் நிறைந்த அதன் மரபினை எண்ணி இறும்பூதடைகின்றேன். அன்னதன் புகழுக்கேற்பத் தகுதியுடை நன் மகனாய் விளங்க நான் என்றும் முயல்வேன்.

அன்புடன் என்னை ஈன்ற அன்னை, ஆருயிர்த்தந்தை
ஆசிரியப் பெருந்தகை, ஆன்ற முதியோர்
அனைவரையும் வணங்குவேன். மாண்புடை
அன்னவர் அனைவரையும் நன்னயம் துலங்க
நடத்துவேன்.

என் நாட்டிற்கும், என் மக்களுக்கும் என் வந்தனை என்றும் உரியது. என் நாட்டவர் வாழ்வின் நலமும் வளமுமே என் போற்றரும் இன்பம் என்று உளம் பூரிப்பேன்.

ஜோதி பிரிண்டர்ஸ், திருச்சி—2. (போன் : 2416)

# முன்னுரை

173895

அண்மையில் அரசியலார் வெளியிட்ட சரித்திரப் பாடத் திட்டத்தையொட்டி இந்நூல் எழுதப்பட்டுள்ளது. பாடங்கள் இனிய நடையிலும் தக்க விளக்கப் படங்களுடனும் அமைந்துள்ளன.

இந்நூல் மூன்ரும் வகுப்பு மாணவர்களின் சரித்திர அறிவை மேன்மேலும் வளர்ப்பதற்குத்துணை செய்யும் என்பதில் ஐயமில்லை.

இதனை அழகுற வெளியிட்டுள்ள பதிப்பகத்தாருக்கு என் நன்றி உரித்தாகுக. நம் நாட்டு மாணவர்களின் கல்விநலம் பேணும் கல்வித்துறையினர் இந்த நூலை ஆதரித்து ஊக்கமளிப்பார்கள் என்று நம்புகின்றேன்.

இங்ஙனம்,

ஆக்கியோன்.

TB
O34,6 N60

# பொருளடக்கம்


| எண். | பாடம் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | இராமாயணம் | ... | 5 |
| 2. | மகாபாரதக் கதை | ... | 10 |
| 3. | கௌதம புத்தர் | ... | 16 |
| 4. | மஹா அலக்சாந்தர் | ... | 19 |
| 5. | அசோகர் | ... | 21 |
| 6. | இளங்கோவடிகள் | ... | 24 |
| 7. | பாபரும் ஹுமாயூனும் | ... | 26 |
| 8. | இராணு பிரதாப்சிங் | ... | 28 |
| 9. | தாஜ்மஹால் | ... | 30 |
| 10. | கிருஷ்ணதேவராயர் | ... | 33 |
| 11. | தேசிங்குராஜன் | ... | 35 |
| 12. | கட்டபொம்மன் | ... | 37 |
| 13. | ஜான்ஸி ராணி | ... | 39 |
| 14. | மகாத்மா காந்தி | ... | 42 |
| 15. | ஜவஹர்லால் நேரு | ... | 45 |


சென்னை-600 008.

## மூன்றும் வகுப்பு

# 1. இராமாயணக் கதை

**இராமர் பிறப்பும் கல்விப் பயிற்சியும்:** வட இந்தியாவில் கோசலம் என்ற ஒரு நாடு உண்டு. அதன் தலைநகர் அயோத்தி. அதை முன் ஒரு காலத்தில் தசரதர் என்ற அரசர் ஆண்டு வந்தார். அவருக்குக் கோசலை, கைகேயி, சுமித்திரை என்று மூன்று மனைவியர் இருந்தார்கள்.

தசரதருக்கு இராமர், இலக்ஷ்மணர், பரதர், சத்துருக்கினர் என்று நான்கு மக்கள் பிறந்திருந்தார்கள். அவர்களுள் இராமனின் தாய் கோசலை; பரதனின் தாய் கைகேயி; இலக்ஷ்மணன் சத்துருக்கினன் இவர்களுடைய தாய் சுமித்திரை.

தசரதருக்கு வசிஷ்டர் என்ற முனிவர் குருவாக இருந்தார். இராமர் முதலியோர் அவரிடம் வில் வித்தை முதலிய எல்லா வித்தைகளையும் கற்றுக் கொண்டார்கள்.

சீதா கலியாணம்: அக்காலத்தில் காட்டில் விசுவாமித்திர முனிவர் என்று ஒரு முனிவர் வசித்து வந்தார். அவர் அடிக்கடி யாகம் செய்வார். அந்த யாகங்களை அரக்கர்கள் அழித்து வந்தனர்.

இராமர் திருமால் என்னும் கடவுளின் அவதாரம் ஆவார். இது விசுவாமித்திரருக்குத் தெரியும். அதனுல் அவர் இராமருடைய உதவி யால் யாகத்தை அழிக்கும் அரக்கரைக் கொல்ல எண்ணினுர். தசரதரிடம் வந்து இராமரைத் தம்முடன் அனுப்புமாறு கேட்டார். தசரதரும் அவ்வாறே அனுப்பினுர். அப்போது இலக்ஷ்மண ரும் அவருடன் சென்ருர்.

விசுவாமித்திரருடைய ஆசிரமத்தில் நிகழ்ந்த யாகத்தை அரக்கர்கள் அழிக்கவந்தனர். இராமரும் லக்ஷ்மணரும் அவர்களுடன் சண்டை போட்டு அவர்களைக் கொன்று விட்டார்கள்.

பிறகு விசுவாமித்திரர் அவர்களை மிதிலை என்னும் நகரத்துக்குக் கூட்டிக்கொண்டுபோனுர். அந்த நகரத்து அரசர் பெயர் ஜனகர். அவரிடம் ஒரு பெரிய வில் இருந்தது. அந்த வில்லை வளைப்பவன் யாரோ அவனுக்குத் தன் மகள் சீதையை மணம் செய்து தருவதாக அவர் விளம்பரம் செய்தார்.

பல அரச குமாரர்கள் வந்து வில்லை வளைக்க முயன்றனர். ஒருவராலும் முடியவில்லை.




சீதாக் கலியாணம்

முடிவில் இராமர் வில்லை வளைத்தார். சீதைக்கும் இராமருக்கும் வெகு விமரிசையாகக் கல்யாணம் நடந்தது.

**இராமர் காட்டுக்குப் போதல்:** தசரதருக்கு வயது அதிகம் ஆனது. அதனால் அவர் தனக்குப் பின் இராமரை அரசராக்க எண்ணினார். அதற்காக அவருக்கு இளவரசுப் பட்டம் கட்ட ஏற்பாடுகள் செய்தார். அவருடைய இரண்டாம் மனைவியான கைகேயிக்குக் கூனி என்று ஒரு தோழி இருந்தாள். அவள் இராமரிடம் பகை கொண்டு இருந்தாள். அவள் அவருக்குப் பட்டம் கட்டாதபடி செய்யத் தீர்மானித்தாள். அவள் கைகேயிக்குத் துர்ப்போதனை செய்தாள்.

அவள் சொல்லிக் கொடுத்தபடி கைகேயி தசரதரிடம் இரண்டு வரங்கள் கேட்டாள். ஒன்று இராமரைப் பதினான்கு வருஷம் காட்டுக்கு அனுப்புவது; மற்றொன்று பரதனுக்குப் பட்டம் கட்டுவது.

தசரதர் முன் ஒரு சமயத்தில் கைகேயிக்கு இரண்டு வரங்கள் கொடுப்பதாகச் சொல்லியிருந்தார். அதை அவள் இப்போது கேட்டபடியால் தசரதரால் மறுக்க முடியவில்லை. அதனால் இராமர் காட்டுக்குச் செல்ல நேர்ந்தது. அவருடன் சீதையும் இலக்ஷ்மணரும் காட்டுக்குச் சென்றார்கள்.

**இராவணன் சீதையைத் தூக்கிச் செல்லுதல்:** காட்டில் இராமர் பர்ணசாலை ஒன்றைக் கட்டிக் கொண்டு வசித்தார். அக்காலத்தில் இலங்கையை இராவணன் என்ற அரக்கன் ஆண்டு வந்தான். அவன் சீதையின் அழகைப்பற்றிக் கேள்விப் பட்டான். அவளைத் தூக்கிக்கொண்டு போய்த் தன் மனைவி ஆக்கிக்கொள்ள எண்ணினான்.

உடனே அவன் சந்நியாசி வேஷம் போட்டுக் கொண்டு சீதை இருக்கும் இடத்தை அடைந்தான். அப்போது இராம லக்ஷ்மணர்கள் வெளியில் போயிருந்தார்கள். இராவணன் சீதையைத் தூக்கிக் கொண்டு போனான். தன் ஊரில் அசோகவனம் என்னும் ஒரு தோட்டத்தில் அவளைச் சிறை வைத்தான்.

வெளியில் சென்றிருந்த இராம லக்ஷ்மணர்கள் திரும்பி வந்தார்கள். சீதையைக் காணுமல் விசனப் பட்டார்கள். காடு மேடு எல்லாம் தேடினார்கள்.

**வானரங்களின் உதவி:** அவர்கள் தேடிக் கொண்டு போகையில் ஒரு மலையின் பக்கத்தில் பல வானரர்கள் இருந்தார்கள். அவர்களின் தலைவன் சுக்கிரீவன். அவனுக்கும் இராமருக்கும் சிநேகம் உண்டாயிற்று. அவன் சீதையைத்தேட நாலா பக்கங்களிலும் பல வானரங்களை அனுப்பினான்.

அவ்வாறு தேடப் போனவர்களில் அநுமான் என்பவரும் ஒருவர். அவர் சீதை இலங்கையில் இருப்பதாக அறிந்தார். அங்கே போய், அசோக வனத்தில் அவளைக் கண்டார். இராமர் வந்து அவளைச் சிறை மீட்பார் என்று தைரியம் கூறினார். திரும்பிப் போய் இராமரிடம் செய்தியை அறிவித்தார்.

**இராமர் சீதையை மீட்டல்:** பிறகு இராமர் வானரப் படைகளுடன் இலங்கைக்குச் சென்றார். அங்கே கொடிய யுத்தம் நடந்தது. இராவணன் முதலான எல்லா அரக்கர்களையும் இராமர்

கொன்றூர். சீதையைச் சிறைமீட்டார். அயோத்திக்குத் திரும்பினூர். இதற்குள் பதினான்கு வருஷங்கள் முடிந்தன. பிறகு அவருக்குப் பட்டாபிஷேகம் நடந்தது. அவர் அரசை ஆண்டு வரலானூர்.

**கேள்விகள்**

1. இராமர் யார்? அவர் ஏன் காடு சென்றூர்?
2. கூனி செய்தது என்ன? அதனுல் என்ன ஆயிற்று?
3. காட்டில் இராமருக்கு நேர்ந்த துன்பம் என்ன?
4. வானரர்கள் செய்த உதவி என்ன?

**பயிற்சி**

இராமாயணக் கதைப்படங்களைச் சேகரியுங்கள்.

---

## 2. மகா பாரதக் கதை

கௌரவரும் பாண்டவரும்: வட இந்தியாவில் குருநாடு என்று ஒரு நாடு உண்டு. அதன் தலைநகர் அஸ்திஞபுரம். அந்த நாட்டைத் திருதராஷ்டிரன் என்று ஒரு அரசன் ஆண்டு வந்தான். அவனுக்குத் துரியோதனன் முதலான நூறு புத்திரர்கள் இருந்தார்கள். அவர்களுக்குக் கௌரவர்கள் என்று பெயர்.

திருதராஷ்டிரனுக்குப் பாண்டு என்று ஒரு தம்பி இருந்தான். அவனுக்குத் தருமபுத்திரன், பீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன் என்று ஐந்து மக்கள் இருந்தார்கள். அவர்களுக்குப் பாண்டவர்கள் என்று பெயர்.

**பாண்டவருக்கும் கௌரவருக்கும் பகை ஏற்படுதல்:** பாண்டவரும் கௌரவரும் துரோணர் என்னும் ஆசிரியரிடம் வில்வித்தை கற்ருர்கள். வில்வித்தையில் பாண்டவர்கள் கௌரவரைக் காட்டிலும் கெட்டிக்காரர்கள் ஆனுர்கள். அதனுல் கௌரவர்கள் பாண்டவர்கள்மேல் பொருமை கொண்டார்கள். அந்தப் பொருமை நாளடைவில் பெரும் பகையாக ஆயிற்று.

**பீமன் பகாசுரனை வெல்லுதல்:** பாண்டவர்கள் மேல் பொருமை கொண்ட கௌரவர்கள், அவர்களைக் கொல்லப் பல தந்திரங்கள் செய்தார்கள். ஒரு சமயம் அவர்கள் ஒரு அழகான மாளிகை கட்டினுர்கள். அதற்கு அரக்கு மாளிகை என்று பெயர். அதில் பாண்டவர்களை வசிக்கும்படியாகச் செய்தார்கள். சமயம் பார்த்து இரவில் அவ் வீட்டிற்குத் தீ வைத்து அவர்களைக் கொல்ல எண்ணினுர்கள். ஆனுல், பாண்டவர்கள் அந்தச் சூதை அறிந்து அங்கிருந்து தப்பிச் சென்று விட்டார்கள். எப்படித் தெரியுமா?

பாண்டவர்களில் பீமன் இந்தச் செய்தியைத் தெரிந்துகொண்டான். அவர்கள் தீ வைக்க எண்ணியிருந்த நாளில் தன் தாயையும் சகோதரர்களையும் அங்கிருந்து கூட்டிக்கொண்டு வேறிடத்திற்குச் சென்றுவிட்டான். தானே அந்த வீட்டிற்குத் தீ வைத்தான்.

தப்பிச் சென்ற பாண்டவர்கள் காட்டு வழியாக நடந்து ஒரு ஊரை அடைந்தார்கள். அந்த ஊருக்கு அருகிலுள்ள காட்டில் பகாசுரன் என்னும்

ஓர் அரக்கன் இருந்தான். அந்த ஊரார் தினமும் அவனுக்கு ஒரு வண்டி நிறையச் சோறு, கறி முதலிய பொருள்களையும், ஒரு ஆளையும் உண வாகத் தரவேண்டும்.



பாண்டவர்கள் இந்தச் செய்தியை அறிந் தார்கள். அந்த அரக்கனைக் கொன்று ஊருக்கு

நன்மை செய்ய எண்ணினார்கள். அப்படியே ஊரார் ஒருநாள் உணவு வண்டி அனுப்பும்போது பீமன் அந்த வண்டியை ஓட்டிச் சென்றான். காட்டை அடைந்ததும் அங்கிருந்த ஒரு ஓடையின் அருகில் வண்டியை நிறுத்தினான். அதன் கரையில் அமர்ந்து வண்டியிலிருந்த உணவுகளைத் தின்ன ஆரம்பித்தான்.

அப்போது தூரத்தில் பகாசுரன் வந்தான். அவன் தன் உணவை வேறு ஒருவன் தின்னக் கண்டு மிகுந்த கோபங் கொண்டான். ஓடி வந்து பீமன் முதுகில் ஒரு குத்துக் குத்தினான். பீமன் அந்தக் குத்தை லக்ஷியம் செய்யவில்லை. பிறகு இருவருக்கும் சண்டை உண்டாயிற்று.

பீமன் பகாசுரனைக் காட்டிலும் பலசாலி. அதனால் முடிவில் அவன் பகாசுரனைக் கொன்றான். அரக்கன் கொல்லப்பட்டதைக் கண்டு ஊரார் மிகவும் சந்தோஷப்பட்டார்கள். பீமனைக் கொண்டாடினார்கள்.

திரௌபதி திருமணம்: பிறகு பாண்டவர்கள் அந்த ஊரை விட்டுப் புறப்பட்டுப் பாஞ்சால நாட்டை அடைந்தார்கள். அந்த நாட்டு அரசனுக்குத் திரௌபதி என்று ஒரு மகள் உண்டு. அவ்வரசன் மச்சயந்திரம் என்று ஒரு யந்திரம் செய்தான். அதில் உயரத்தில் ஒரு மீன் வேகமாகச் சுழன்று கொண்டே இருந்தது. அதற்கு நேராகக் கீழே ஒரு கொப்பரையில் நீர் வைக்கப்பட்டு இருந்தது. அந்த நீரில் மீனின் நிழல்

தெரிந்தது. நீரில் தெரியும் நிழலைப் பார்த்த படியே மேலே உள்ள மீனை அம்பெய்து துளைக்க வேண்டும். அப்படி யார் செய்கிறுரோ அவருக்கே தன் மகளை மணம் செய்து கொடுப்பதாக அவ்வரசன் சொன்னுன்.

பல நாட்டு அரச குமாரர்கள் அந்த மீனை எய்து துளைக்க முயன்றனர். ஆனுல் ஒருவராலும் முடியவில்லை. கடைசியில் அருச்சுனன் அம் பெய்து அதைத் துளைத்தான். அப்போது பாண் டவர்களின் தாய் சொன்ன ஒரு சொல்லால் அவளைப் பாண்டவர் ஐந்து பேரும் கலியாணம் செய்து கொள்ளும்படி நேர்ந்தது.

**பாண்டவர் சூதாடி நாடு நகரங்களை இழத்தல்:** பிறகு பாண்டவர்கள் குரு நாட்டின் ஒரு பகுதியை ஆண்டு வந்தார்கள். அப்போது துரியோதனன் அவர்களைக் கெடுக்க எண்ணினுன். அவன் தன் மாமன் சகுனி என்பவனேடு அவர்களைச் சூதாடச் செய்தான்.

சகுனி சூதாட்டத்தில் மிகவும் கெட்டிக் காரன். அவன் எல்லா ஆட்டங்களிலும் வெற்றி பெற்றுன். அதனுல் பாண்டவர்கள் தங்கள் நாடு நகரம் எல்லாவற்றையும் பந்தயமாக வைத்துத் தோற்றுப்போக நேர்ந்தது. அவர்கள் காட்டில் பன்னிரண்டு ஆண்டுகள் வசிக்கவேண்டும். பிறகு ஒரு வருஷம் ஒருவருக்கும் தெரியாமல் மறைந்து வசிக்கவேண்டும். அப்படிச் செய்து விட்டுத் திரும்பி வந்தால் அவர்களுடைய

இராச்சியத்தைத் தருவதாகத் துரியோதனன் சொன்னான்.




சகுனியுடன் சூதாட்டம்

பாரதப்போரும் பாண்டவர் வெற்றியும்: நிபந்தனைப்படியே பாண்டவர்கள் நடந்தார்கள். பிறகு திரும்பி வந்து துரியோதனனிடம் தங்கள் இராச்சியத்தைக் கேட்டார்கள். துரியோதனன் கொடுக்க முடியாது என்று மறுத்துவிட்டான். அதனால் இருவருக்கும் போர் உண்டாயிற்று. பதினெட்டு நாள் கொடிய போர் நடந்தது. அப்போரில் பாண்டவர் வெற்றி பெற்று நாட்டை ஆண்டு வரலானார்கள்.

### கேள்விகள்

1. பாண்டவர்கள் யார்? கௌரவர்கள் யார்?
2. அவர்களுக்குள் ஏன் பகை உண்டாயிற்று?

3. பகாசுரனைப் பற்றி அறிவது என்ன ?

4. திரௌபதியைக் கல்யாணம் செய்துகொள்ள விதிக்கப்பட்ட நிபந்தனை யாது ?

5. பாண்டவரும் கௌரவரும் ஏன் போரிட்டனர்? முடிவு என்ன ஆயிற்று ?

---

# 3. கௌதம புத்தர்

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வட இந்தியாவில் இமயமலைச் சாரலில் நேபாள நாட்டின் அருகில் சாக்கியநாடு இருந்தது. அதன் தலைநகரம் கபிலவாஸ்து. அதைச் சுத்தோதனன் என்ற அரசர் ஆண்டு வந்தார். அவர் ஒரு நல்ல அரசர். அவரது மனைவியின் பெயர் மாயாதேவி.

வெகு நாட்களுக்குப் பின் அவர்களுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அதற்கு சித்தார்த்தர் எனப் பெயரிட்டனர். அவர் வெகு சிறப்பாக வளர்க்கப்பட்டார். எட்டாம் வயதில் அவருக்கு கல்வி கற்பிக்க ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர். அவர் எல்லாவற்றையும் விரைவில் கற்றுக் கொண்டார்.

அவருக்கு யசோதரை என்ற இளவரசியை மணம் செய்தனர். அவர்களுக்கு இராகுலன் என்ற ஆண் மகவு பிறந்தது.

ஒரு நாள் அவர் நகரைச்சுற்றி வந்தபொழுது, ஒரு நரைத்த கிழவன், தள்ளாடித் தடியை ஊன்

றிக் கொண்டு நடந்து வருவதைக் கண்டார். மற்ருெரு நாள் அவர், நோயால் இளைத்து அவதிப் படும் நோயாளியைக் கண்டார். மற்ருெரு நாள், அவர் ஒரு பிணத்தைச் சிலர் தூக்கிச் செல்வதை யும், அதன்பின் பலர் அழுதுகொண்டு செல்வதை யும் கண்டார். இவற்றிலிருந்து இந்த உலகம் மனிதனுக்கு வயோதிகம், வியாதி, இறத்தல் ஆகியவற்ருல் துன்பம் ஏற்படுவதை அறிந்தார்; இத்துன்பங்களைப் போக்க வழி காண வேண்டும் என நினைத்தார்.

அதற்காக ஒரு நாள் இரவில் யாவரும் அறியாமல் அவர் அரண்மனையை விட்டுக் காட்டுக்குச் சென்ருர். அவர் துறவி வேடம் பூண்டார். பல துறவிகளையும், முனிவர்களையும் நாடி மாந்தரின் துன்பங்களைப் போக்க வழிகேட்டார். அவருக்கு சரியான பதில் கிடைக்கவில்லை. அவர் உண்ணுமலும், உறங்காமலும் சில காலம் தவம் செய்தார். அதனுலும் பயன் ஏற்படவில்லை

ஒரு நாள் அவர் புத்தகயா என்னுமிடத்தில் ஒரு போதி மரத்தின் அடியில் உட்கார்ந்திருந்தார். அப்போது அவருக்கு ஞானஉதயம் உண்டாயிற்று.

உலகத்திலுள்ள துன்பங்களுக் கெல்லாம் ஆசையே காரணம். ஆசையை ஒழித்தால் துன்பங்களை ஒழித்து விடலாம். மற்றும் பிற உயிர்களிடம் அன்பு காட்ட வேண்டும்; தன்னைப்போல் பிறரை நேசிக்க வேண்டும்; ஜீவவதை செய்யக் கூடாது; எப்பொழுதும் உண்மையே பேச

வேண்டும் என்பன அவர் கண்டறிந்த உண்மைகள் ஆகும். அது முதல் அவர் புத்தர் என அழைக்கப்பட்டார். புத்தர் என்னும் சொல்லுக்கு எல்லாம் அறிந்தவர் என்பது பொருள்.



புத்தர்

அவர் இவ்வுண்மைகளைப் பல இடங்களுக்கும் சென்று போதித்து வரலானுர். பலர் அவருக்குச் சீடராயினர். அவரது கொள்கைகளை மேற் கொண்டவர்கள் பௌத்தர்கள் எனப் பட்டனர். அது பௌத்த மதம் எனப் பெயர்பெற்றது.

இப்பொழுதும் திபெத்து, நேபாளம், சைனு, ஜப்பான், இலங்கை, ஆகிய இடங்களில் புத்த மதத்தினர் உள்ளனர்.

### கேள்விகள்

1. கௌதம புத்தரின் பெற்றேர் யாவர்?
2. சித்தார்த்தர் துறவியாகக் காரணமென்ன?
3. புத்தர் கண்டறிந்த உண்மைகள் யாவை?
4. இப்பொழுது புத்த மதத்தினர் எந்த நாடுகளில் உள்ளனர்.
5. குறிப்பு எழுது:- மாயாதேவி, இராகுலன், புத்த கயா, போதிமரம்.
6. புத்தர் என்ற சொல்லின் பொருள் யாது?

# 4. மகா அலக்சாந்தர்

ஐரோப்பா கண்டத்தில் வெகுகாலமாக கிரீஸ் என்ற தேசம் இருக்கிறது. முன் காலத்தில் அதன் ஒரு பாகம் மாசிடோனியா என இருந்தது. அதை பிலிப் என்ற அரசன் ஆண்டு வந்தான். அவருடைய மகன் அலக்சாந்தர்.

பிலிப் தன் மகனை நல்ல அரசனுகவும், தைரியமுள்ள போர் வீரனுகவும் ஆக்க விரும்பினுன். அலக்சாந்தருக்கு ஆரும் வயதில் எழுதவும், படிக்கவும், கூட்டங்களில் பேசவும் கற்றுக் கொடுத்தனர். அரிஸ்டிடாடில் என்பவர் அவரை ஒரு சிறந்த நல்ல அரசராக விளங்கப் பழக்கினுர்.



மகா அலக்சாந்தர்

ஒரு நாள் புசிபேலஸ் என்ற ஒரு முரட்டுக் குதிரை அரண்மனைக்குக் கொண்டு வரப் பட்டது. அதை ஒருவராலும் அடக்க முடியவில்லை. அலக்சாந்தர் அதை அடக்கினுர்; அதன் மீது ஏறிச் சவாரி செய்தார். எல்லோரும் ஆச்சரியப்பட்டனர்.

சில ஆண்டுகளுக்குப்பின் பிலிப் இறந்தார்; அலக்சாந்தர் அரசரானார்.

அலக்சாந்தர் தனது நாடு மிகவும் சிறியது என்றும், கடலைக்கடந்து புதிய நாடுகளை ஜெயிக்க வேண்டும் என்றும் தீர்மானித்தார். அவர் ஆசியாமைனர் என்ற இடத்தைத் தாண்டி எகிப்து நாட்டை அடைந்தார். அங்கு அவர் அலெக்ஸாந்திரியா என்ற நகரைக் கட்டினார். அவர் பர்ஸியா நாட்டையும் பிடித்து, அந்த நாட்டிற்கும் அரசரானார்.

பின் அவர் இந்தியாவில் சிந்து நதிக் கரைக்கு வந்தார். அங்கு புருஷோத்தமர் என்ற அரசர் அலக்சாந்தரை எதிர்த்தார். அலக்சாந்தர் புருஷோத்தமரை முறியடித்து வெற்றி கண்டார். ஆயினும், புருஷோத்தமருடைய தைரியத்தை மெச்சி, அவருடைய நாட்டை அவருக்கே திருப்பிக் கொடுத்தார். மேலும் தான் செயித்த சில நாடுகளையும் கொடுத்து அவரைக் கப்பம் கட்டும்படி ஏற்பாடு செய்தார்.

அப்பொழுது அலக்சாந்தரது வீரர்கள் களைத்துப் போயிருந்தனர். அவர்கள் மனைவி மக்களை விட்டுப் பிரிந்துவந்து வெகு நாட்களாகி விட்டபடியால் அவர்கள் தாய் நாடு திரும்ப விரும்பினர். அலக்சாந்தரும் அதற்கு ஒப்புக் கொண்டார். அவர்கள் பாபிலோனுக்கு திரும்பிப் போய்க் கொண்டிருந்தனர். போகும் வழியில் பாபிலோனியா என்ற இடத்தில் அலக்சாந்தர் நோய்வாய்ப்பட்டு

இறந்துபோனார். அப்பொழுது அவருக்கு வயது முப்பத்து நான்கு. அவர் ஒரு புகழ் பெற்ற வீரர் என சரித்திரத்தில் இடம் பெற்றுள்ளார்.

**கேள்விகள்**

1. அலக்சாந்தர் யார்?
2. அலக்சாந்தருக்கு எவற்றில் பயிற்சி அளிக்கப் பட்டது?
3. புசிபேலஸின் வரலாற்றைச் சுருக்கிக் கூறு.
4. இந்தியாவில் அலக்சாந்தரை எதிர்த்த போர் வீரன் யார்? அதன் முடிவு என்ன?
5. அலக்சாந்தருடைய போர் வீரர்கள் தாய்நாடு திரும்ப விரும்பியது ஏன்?

---

# 5. அசோகர்

நமது தேசீயக்கொடியை உற்று நோக்குங்கள். அதன் நடுவில் நீல நிறத்தில் ஒரு சக்கரம் இருக்



நமது நாட்டுக்கொடி

கிறது. அதற்கு அசோக சக்கரம் என்று பெயர்.

அசோகர் என்பவர் வட இந்தியாவில் ஆண்ட அரசர்களில் மிக்க புகழ் பெற்றவர் ஆவார். அவரைப் பற்றி இப்பாடத்தில் படிப்போம்.

சுமார் 2,200 ஆண்டுகளுக்கு முன் வட இந்தியாவில் மகதம் என்ற ஒரு நாடு இருந்தது. அதன் தலைநகரம் பாடலிபுத்திரம். இப்பொழுது அந்நகரம் பாட்னு என வழங்கப்படுகிறது. அந்த நாட்டை சந்திரகுப்தர் என்ற அரசர் ஆண்டு வந்தார். அவருடைய மகன் பிந்துசாரர். பிந்துசாரரின் மகன் அசோகர்.




அசோகர்

அசோகரது குரு அம்ரஸார். அவர் அசோகருக்கு சந்திரகுப்தரின் பெருமைகளையும் அவரது பெரிய நாட்டின் சிறப்பையும் எடுத்துக் கூறுவார். அசோகரும் உலகத்தையே ஜெயித்து ஆள மன உறுதி கொண்டார்.

அசோகருடைய 21-ஆம் வயதில் பிந்துசாரர் இறந்தார்; அசோகர் அரசராக முடிசூட்டப் பட்டார்.

அவர் கலிங்க நாட்டின்மீது படையெடுத்தார். கடும்போர் நடந்தது. அசோகர் வெற்றி பெற்ருர். போர்க்களத்தில் பலர் மாண்டனர். பலர் காயம் பட்டு அவதிப்பட்டு கதறி அழுது கொண்டிருந் தனர். தன் மகனை இழந்த தாய்மார்களும், கண வனை இழந்த மனைவிமார்களும் கதறி அழுதனர். போர்க்களத்தை நேரில் பார்வையிட்ட அசோகரது மனம் மாறியது. அதுமுதல் போர் செய்வதில்லை என மன உறுதிபூண்டார்.

அசோகர் புத்த மதத்தைத் தழுவினுர். புத்த மதக் கொள்கைகளை பல நாடுகளிலும் பரவச் செய் தார். நாட்டில் முக்கியமான இடங்களில் கல் தூண்களை நட்டு, அவற்றில் பல நீதி வாக்கியங் களைப் பொறித்து வைத்தார். அத்தூண்களுக்கு அசோகர் கற்றூண்கள் என்று பெயர்.

அவற்றில்,

உண்மையைக் கடைப்பிடி.
பெரியோர்களுக்குக் கீழ்ப்படிந்து நட.
உயிர்களைக் கொலை செய்யாதே.
எல்லோருக்கும் நன்மைகளைச் செய்.

எனப் பொறிக்கப்பட்டிருந்தது. இப்பொழுதும் சாரநாத் என்ற இடத்தில் அத்தகைய கற்றூண் ஒன்று உள்ளது.

அவர் மக்களுக்கு பல நன்மைகளைச்செய்தார்.

அசோகர் ஆட்சி செங்கோல் ஆட்சியாகப் புகழ் பெற்றது. அவருடைய பெயரை இன்றும் புகழ்ந்து பாராட்டுகிருேம்.

**கேள்விகள்**

1. அசோகர் உலகை வென்று ஆள ஆசை கொண்டதேன் ?

2. அசோகர் இனி சண்டை செய்வதில்லை என மன உறுதி கொள்ளக் காரணமென்ன ?

3. அசோகர் புத்த மதத்தைத் தழுவக் காரணமென்ன?

4. அசோகர் கற்றூண்களில் செதுக்கி வைத்தவை யாவை ?

---

# 6. இளங்கோவடிகள்

ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முன் சேர நாட்டை நெடுஞ்சேரலாதன் என்ற அரசன் ஆண்டு வந்தான். அவன் நீதிமுறை தவருதவன். அவனுக்குக் கலைகளிலும், சங்கீதத்திலும் பிரியம் அதிகம். அவனுடைய சபையில் பல கற்றறிந்த பெரியோர் இருந்தனர்.

அவருக்கு இரண்டு மகன்கள் இருந்தனர். மூத்தவன் செங்குட்டுவன்; இளையவன் இளங்கோ. அவர்கள் உயரமாகவும், அழகாகவும் இருந்தனர். இளங்கோ மிகவும் சாதுவானவர். அவர்கள் ஏற்ற வயதில் சிறக்கக்கற்ற ஆசிரியர்களிடம் கல்வி கற்றனர்.

ஒரு நாள் அரசன் சபையில் சிம்மாதனத்தில் உட்கார்ந்திருந்தான். அவரது இரண்டு பக்கங்களிலும் மதிநுட்ப மந்திரிகள் உட்கார்ந்திருந்தனர். புலவர்களும், அங்கிருந்தனர். செங்குட்டுவனும், இளங்கோவும் அரசனுக்குப் பின்புறத்தில் உட்கார்ந்திருந்தனர்.

அப்பொழுது சோழநாட்டிலிருந்து நிமித்திகன் ஒருவன் சபைக்கு வந்தான். அவன் செங்குட்டுவனையும், இளங்கோவையும் உற்று நோக்கினான். இளங்கோவிடம் அரசராவதற்குரிய அறிகுறிகள் காணப்படுவதாகக் கூறினான். அரசனது மனம் திடுக்கிட்டது. 'அண்ணனிருக்க தம்பி அரசாள்வது நம்நாட்டுமுறை அன்று'. செங்குட்டுவனது மனமும் தடுமாறிற்று. இளங்கோவிற்கும் மனத்தில் வருத்தம் ஏற்பட்டது. சபையிலிருந்த எல்லோரும் இதைப்பற்றியே ஆழ்ந்து யோசித்துக் கொண்டிருந்தனர்.

இளங்கோ எழுந்து தன் தகப்பனை வணங்கினார்; மற்றவர்களையும் வணங்கினார். அன்று முதல் தான் துறவிக்கோலம் பூண்டு, அரச சுகங்களைத் துறந்து கானகம் செல்வதாகச் சபதம் செய்தார். அவர் சைனத் துறவிகளை நாடிச் சென்று துறவியானார். அவர் **கோவலன் கண்ணகி**யின் கதையை எல்லோரும் படித்து மகிழும்படி **சிலப்பதிகாரம்** என்ற நூலாக இயற்றினார். இச் சிலப்பதிகாரம் தமிழிலுள்ள ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றாகும்.

75
04,6(3)
N66

### கேள்விகள்

1. நிமித்திகன் நெடுஞ்சேரலாதனுடைய சபைக்கு வந்தபொழுது அரச சபையில் இருந்தோர் யாவர்?
2. நிமித்திகன் கூறியது என்ன ?
3. நிமித்திகன் கூறியதைக் கேட்டு அவையிலிருந்தோர் திடுக்கிடக் காரணமென்ன ?
4. இளங்கோ துறவறம் பூணக் காரணம் என்ன ?
5. சிலப்பதிகாரம் என்பது யாது?

600 008.
173895

# 7. பாபரும் ஹுமாயூனும்

இந்தியாவின் வடமேற்கே ஆப்கானிஸ்தானம் எனும் நாடு உள்ளது. அதில் காபூல் என்றநாட்டை பாபர் என்பவர் ஆண்டு வந்தார். அவர் மிகவும் திறமைசாலி; பெருந்தன்மை உள்ளவர். போரிடுவதில் வல்லவர். அவர் இந்துஸ்தானத்தின் செழுமையைப் பற்றிக் கேள்விப்பட்டார். ஆதலால் அதைத் தான் செயித்து ஆள ஆசைப்பட்டார்.

அப்பொழுது இப்ரஹீம் லோடி என்ற முகமதிய அரசர் டில்லியில் அரசாட்சி செய்து வந்தார். அவர் வீண் ஆடம்பரச் செலவு அதிகம் செய்வார். அதற்காக மக்களிடமிருந்து ஏராளமாக வரிகளை வசூலித்தார். இதனுல் பிரபுக்களும் மக்களும் அவரை வெறுத்தனர்.

சில இராஜபுத்திர அரசர்களும் பிரபுக்களும் இப்ராஹீம் லோடியை சிம்மாசனத்தினின்று நீக்க, தங்களுக்கு உதவி செய்யுமாறு பாபரைக் கேட்டுக் கொண்டனர். அதன்படி பாபர் இந்துஸ்தானத்திற்கு ஒரு பெரும் படையுடன் வந்தார். பாபரின் படையில் பீரங்கிகளும் துப்பாக்கிகளும் இருந்தன. ஆனுல் இந்தியப்படை அம்பு, ஈட்டிகளை மட்டுமே பெற்றிருந்தன.

படையெடுத்து வரும் பாபரை எதிர்க்க இப்ராஹீம் லோடி புறப்பட்டார். டில்லிக்கு வடக்கே ஐம்பது மைல் தூரத்திலுள்ள பானிபட்டு என்ற இடத்தில் கடும்போர் நடந்தது. பாபரின்

படையினர் வெடித்த பீரங்கி சப்தமும், தீ வெளிச்சமும் இப்ரஹீம் லோடியின் படையினருக்குப் புதியனவாக இருந்தன. அதனுல் அவர்கள் பீதி அடைந்தனர். இப்ரஹீம் லோடியின் படைவீரர்கள் பலர் மாண்டனர். இப்ரஹீம் லோடியும் போர்க்களத்தில் இறந்தான்.

பாபர் டில்லியின் அரசனுக முடிசூட்டிக் கொண்டார். அவரே இந்தியாவை ஆண்ட மொகலாய வம்சத்தின் முதல் அரசர்.

பாபரின் பிரியமுள்ள மகன் ஹுமாயூன். ஒரு சமயம் அவன் நோயுற்ருன். நாளுக்கு நாள் வியாதி அதிகரித்தது. அப்பொழுது ஒருவர் பாபருடைய உடைமைகளில் முக்கியமானதைக் கடவுளுக்கு அர்ப்பணித்தால் ஹுமாயூன் பிழைக்கக் கூடும் என்ருர்.

அவர் ஹுமாயூன் படுக்கையின் பக்கத்தில் சென்று முழந்தாளிட்டு, கடவுளை வணங்கித் தன் மகனுக்கு உயிர்ப்பிச்சை கொடுத்தால், தன் உயிரையே கடவுளுக்கு அர்ப்பணிப்பதாகக் கூறினுர். பின் அவர் தன் மகனுடைய படுக்கையை வலம் வந்து, தன்மகனின் வியாதியைத்தான் ஏற்றுக் கொண்டு விட்டதாகக் கூறினுர். ஹுமாயூன் தேக சுகம் அடைந்தான். ஹுமாயூனுடைய நோய் பாபரைப் பற்றிக்கொண்டது. சில நாட்களுக்குப்பின் பாபர் இறந்தார். ஹுமாயூன் அரசரானுர்.

தகப்பன் தன் மகனுக்காக தன் உயிரையே கொடுத்த விந்தையைப் பார்த்தீர்களா?

### கேள்விகள்

1. பாபர் முதலில் எந்த நாட்டை ஆண்டார்?
2. இப்ராஹீம் லோடியை எல்லோரும் வெறுக்கக் காரணமென்ன?
3. பாபர் இந்தியாவை ஆள ஆசைகொள்ளக் காரணமென்ன?
4. பாபர் இந்தியாவின்மீது படையெடுக்கக் காரணமென்ன?
5. பானிபட்டு சண்டையில் லோடியின் வீரர்கள் பீதி அடையக் காரணமென்ன?
6. ஹுமாயூன் யார்? அவனுடைய வியாதி எவ்வாறு நீங்கிற்று?

---

# 8. இராணு பிரதாப் சிங்

வெகு காலத்திற்கு முன் வடஇந்தியாவில் பல இராஜபுத்திர இராஜ்யங்கள் இருந்தன. அவற்றில் மீவார் என்பது ஒன்று. அதன் தலை நகரம் சித்தூர். அதை உதயசிங் என்ற அரசர் ஆண்டு வந்தார்.

அப்பொழுது டில்லியை மொகலாய மன்னரான அக்பர் ஆண்டுவந்தார். அவர் பல இராஜபுத்திர அரசர்களுடன் நட்புக் கொண்டார். ஆனால், உதயசிங் மாத்திரம் அவருடன் நட்புக் கொள்ள மறுத்தார். ஆதலால் அக்பர் சித்தூரின் மீது படையெடுத்தார்.

அப்பொழுது உதயசிங் நாட்டைக்காக்கும் பணியை ஜெயமால் என்பவரிடம் ஒப்படைத்தார். அவர் மலைப்பக்கம் சென்று விட்டார். இராஜபுத்

திரர்களுக்கும் மொகலாயர்களுக்கும் கடும்போர் நடந்தது. அதில் மொகலாயர்களே வெற்றி பெற்றனர்.

உதயசிங்கின் மகன் இராணு பிரதாப் சிங். அவர் வீரம் மிக்கவர். மொகலாயர்களிடமிருந்து தம் அரசை மீட்க உறுதி கொண்டார். அவருக்கு அதிகப்படை பலம் இல்லை. ஆயினும் உதயசிங் அக்பருடன் சமாதானம் செய்து கொள்ள விரும்ப வில்லை.

அவர் அக்பரை எதிர்த்தார். ஹால்டிகட் என்னும் கணவாய் அருகே போர் நடந்தது. அதன் இறுதியில் இராணுவுக்கு காயம் ஏற்பட்டது. அவருடைய அருமைக் குதிரையின் பெயர் சைதக். அவர் அக்குதிரை மீது ஏறி மலைப்பக்கம் சென்றார்.

அங்கு மலைக்காடுகளில் பலகாலம் அலைந்து வாழ்ந்தார். ஆயினும் அவர் மனம் தளரவில்லை. பின்பு அவர் தன் வலிமையைப் பெருக்கிக் கொண்டார். தன் நாட்டின் சில பகுதிகளைப் பிடித்துக் கொண்டார். வீரர் பிரதாப்சிங் போர் செய்து களைத்து மாண்டார்.

இராணு பிரதாப் சிங்கின் வீரம் இராஜபுத்திரர்களால் இன்னும் போற்றப்படுகிறது. அவர் வீரம் பற்றிய பல பாடல்கள் இன்றும் இராஜபுத்திரர்களால் பாடப்படுகின்றன. அக்பரே அவருடைய வீரத்தைப் பாராட்டியுள்ளார். பிள்ளைகளே! எவ்வளவு கஷ்டம் வந்த போதிலும் அவர் எவ்வளவு வீரத்துடன் நடந்து கொண்டிருக்கிறார் பார்த்தீர்களா?

### கேள்விகள்

1. மீவார் நாடு எங்கு அமைந்துள்ளது?
2. மீவார் நாட்டின் தலைநகரம் எது?
3. அக்பர் மீவார் நாடடின்மீது படையெடுக்கக் காரணமென்ன?
4. இராணா பிரதாப் சிங்கின் பெருமைகளைக் கூறு.
5. இராணா பிராதாப் சிங்கின் வரலாற்றிலிருந்து நீ அறியும் நீதி யாது?

### பயிற்சி

1. இராணா பிரதாப் சிங்கின் படங்களைச் சேகரி.
2. இராணா பிரதாப் சிங்கின் வீரத்தைப் பற்றி மற்ற மாணவர்களுடன் உரையாடு.

---

# 9. தாஜ் மஹால்

உலகிலுள்ள அதிசயங்களில் நமது இந்திய நாட்டிலுள்ள தாஜ் மஹால் என்ற அழகிய கட்டட



தாஜ்மஹால்

மும் ஒன்று ஆகும். அது ஆக்ரா நகரில் உள்ளது. புண்ணிய நதிகளான கங்கையும் யமுனையும்

கலக்குமிடத்தில் ஆக்ரா நகரம் உள்ளது. அந்த அழகான கட்டடம் கட்டப்பட்ட வரலாற்றினை இப்பாடத்தில் படிப்போம்.

இந்தியாவை ஆண்ட மொகலாய சக்கரவர்த்திகளில் ஜஹாங்கீர் பெருமை மிக்கவர். அவருடைய மகன் ஷாஜஹான். அவர் நாட்டைச் செவ்வனே ஆண்டுவந்தார். அவருக்குக் கட்டடம் கட்டுவதில் பிரியம் அதிகம். அவர் பல நகரங்களையும், அரண்மனைகளையும், கோரிகளையும், மசூதிகளையும் கட்டுவித்தார். அவைகளெல்லாம் சிறந்த கட்டடங்களாக இன்றும் விளங்குகின்றன.

மும்தாஜ்மஹால் என்ற அழகியபெண்ணை ஷாஜஹான் மணந்து கொண்டார். அவர்களிருவரும் ஒருவர் மீது ஒருவர் உண்மையான ஆசை வைத்திருந்தனர். அவர்களுக்கு அநேக குழந்தைகள் பிறந்தன. அவர்களுக்குக் கலியாணமாகி பதினன்கு வருடங்களுக்குப் பின் மும்தாஜ்மஹாலுக்கு கடுமையான நோய்கண்டது. அச்சமயம் ஷாஜஹான் மிக்க வருத்தத்துடன் அவளை விட்டுப் பிரியாது அவளைக் கவனித்து வந்தார். அவளுக்கு வியாதி அதிகரித்தது. ஷாஜஹான் மும்தாஜ்மஹாலை தனக்கு அவள்மீதுள்ள ஆசையை எவ்வாறு காட்டலாமென்று கேட்டார். அதற்கு அவள் தான் இறந்த பிறகு தன் பெயர் விளங்கும்படியாக ஒரு கோரியைக் கட்டும்படி கூறினள். சில நாட்களில் அவள் இறந்துவிட்டாள்.

ஷாஜஹான் அவளை அடக்கம் செய்த இடத்தில் ஒரு சிறந்த கோரியைக் கட்டினுர். அதற்கு மும்தாஜ் மஹால் எனப் பெயரிட்டார். ஆனுல் மக்கள் அதனைச் சுருக்கமாக 'தாஜ் மஹால்' என வழங்கினர்.

அது உலகத்திலுள்ள கோரிகளில் நேர்த்தியானது. அது முற்றிலும் பளிங்குக் கற்களால் கட்டப்பட்டுள்ளது. அதைக்கட்ட முப்பது வருடமாயிற்று; முப்பது கோடி ரூபாய் செலவாயிற்று. அதன் அழகைக் கண்டுகளிக்க பல நாட்டவரும் ஆக்ராவுக்கு வந்த வண்ணமாக இருக்கின்றனர். தாஜ்மஹாலினுல் நம் நாட்டிற்கு எவ்வளவு பெருமை !

**கேள்விகள்**

1. ஆக்ரா எங்குள்ளது ?
2. ஷாஜஹான் யார் ?
3. மும்தாஜ்மஹால் யார் ?
4. மும்தாஜ்மஹால் ஷாஜஹானிடம் இறக்கும் போது யாது கூறினுள் ?
5. தாஜ்மஹால் கட்டப்பட்ட வரலாற்றைச் சுருக்கி எழுது.
6. தாஜ்மஹாலின் சிறப்புக்களைக் கூறுக.

**பயிற்சி**

தாஜ்மஹாலின் படங்களைச் சேகரியுங்கள்.

# 10. கிருஷ்ணதேவராயர்

ஒரு சமயம் முகமதியர்களின் அதிகாரம் தக்காணத்தில் பெருகியது, அதைத்தடுக்க துங்கபத்திரை நதிக்கரையில் ஹரிகரர், புக்கர் என்ற இரண்டு சகோதரர்கள் ஒரு இராஜ்யத்தை ஏற்படுத்தினர். அதற்கு விஜய நகர இராஜ்யம் என்று பெயர். இந்துக்கள் திரளாக அங்கு வந்து குடியேறினர்.

விஜயநகரம் ஓர் அழகான பட்டணம். அது விவசாயத்திற்கும் வியாபாரத்திற்கும் புகழ் பெற்றது. அதை ஆண்ட அரசர்களுள் கிருஷ்ண தேவராயர் என்பவர் மிகச் சிறந்தவர்.


கிருஷ்ணதேவராயர்

கிருஷ்ணதேவராயர் ஒரு சிறந்த போர் வீரர். அவர் ஒரு சிறந்த கல்விமான்; கவிபாடுவதில் வல்லவர். அவர் கற்றோரையும் கலைஞர்களையும் ஆதரித்தார். தெலுங்கு, சமஸ்கிருதம் ஆகிய மொழிகள் இவரால் போற்றப்பட்டன. இவர் பல அரசர்களைவென்று, அவர்களுடைய இராஜ்யத்தை தன் இராஜ்யத்துடன் சேர்த்துக்கொண்டார்.

இவருடைய சபையில் எட்டு கல்விமான்கள் இருந்தனர். அவர்களுக்கு அஷ்டதிக்கஜங்கள் என்று பெயர். அவர்களில் முக்கியமானவர்கள் பெத்தண்ணு, திம்மண்ணு, தெனுலி இராமன் ஆவர். அவருடைய மந்திரியின் பெயர் அப்பாஜி. அவர் பல கோயில்களையும் மண்டபங்களையும் கட்டினுர். அவரால் கட்டப்பட்ட கோபுரங்களை ஸ்ரீரங்கம், காஞ்சீபுரம் ஆகிய இடங்களில் இன்றும் காணலாம். அவர் போர்த்துக்கீஸியருடன் நட்புக் கொண்டு தன்நாட்டு வியாபாரத்தைப் பெருக்கினுர். விஜயநகர இராஜ்யத்தின் சிறப்பைக் காண பல அயல் நாட்டினர் அந்நாட்டுக்கு வந்தனர்.

அவருக்குப்பின் விஜய நகர இராஜ்யத்தை ஆண்ட அரசர்கள் திறமையற்றவர்கள். மொகலாய மதியர்கள் அந்த நாட்டின்மீது படையெடுத்து வெற்றி கொண்டனர். அவர்கள் விஜயநகரத்தை இடித்தும் தீ வைத்தும் பாழாக்கி விட்டனர். அதன் அழிவுச் சின்னங்களை ஹம்பி என்னுமிடத்தில் இன்றும் காணலாம்

### கேள்விகள்

1. விஜயநகரத்தை ஏற்படுத்தியவர் யார்?
2. விஜயநகர அரசர்களில் புகழ் பெற்றவர் யார்? அவர் புகழுக்குக் காரணமென்ன?
3. விஜயநகரம் எவ்வாறு அழிவுற்றது?

# 11. தேசிங்கு ராஜன்

தமிழ் நாட்டில் செஞ்சிக்கோட்டை என்பது ஒரு பழமையானஊர். இவ்வூர் தென்னுர்க்காடு மாவட்டத்தில் திண்டிவனம் என்ற ஊருக்கு அருகில் இருக்கிறது. ஒரு காலத்தில் இவ்வூரை தேசிங்குராஜன் என்ற அரசன் ஆண்டு வந்தான். அவன் ஒரு சிறந்த குதிரை வீரனுமாவான்.

அப்பொழுது ஆர்க்காடு என்னும் இடத்தில் நவாபு ஆண்டு வந்தார், நவாபுக்கு தேசிங்கு கப்பம் கட்ட மறுத்தான். அதனுல் ஆர்க்காட்டு நவாபு செஞ்சிக்கோட்டையின்மீது படை எடுத்துப் போர் செய்தான்.

தேசிங்குக்கு மகம்மதுகான் என்ற ஒரு சிறந்த நண்பர் இருந்தார். அவர் தேசிங்கின் படைத் தலைவராக இருந்தார். அவர் தம் படையுடன் போர்க்களம் சென்ருர். பகைவரை வென்று மகிழ்ச்சியுடன் திரும்பி வந்துகொண்டிருந்தார். அப்பொழுது பகைவருடைய படை வீரர்களில் ஒருவன் முகம்மதுகானைச் சூழ்ச்சியால் கொன்று விட்டான்.

முகம்மது கான் இறந்ததை தேசிங்கு கேள்விப்பட்டான். உடனே தானும் போருக்குப் புறப்பட்டான். பகைவர் படைக்குள் சிங்கம்போலப் பாய்ந்தான், பலரை வெட்டி வீழ்த்தினுன்; வெற்றியும் பெற்ருன்.

ஆயினும் தன் நண்பன் மகம்மதுகான் இறந்த பின், அவன் உயிருடன் வாழ விரும்பவில்லை. ஆதலால் தன் வாளால் தன்னையே வெட்டிக்கொண்டு இறந்தான்.

தேசிங்கு இறந்ததை அவன் மனைவி அறிந்தாள். அவள் ஒரு குழியைவெட்டி, தீயை மூட்டினாள்; எரியும் தீயில் குதித்து இறந்தாள்.

இவர்களின் வீரத்தை அறிந்த நவாபு அதிசயித்தார். இராணி தீக்குளித்து இறந்ததற்காக வருந்தினார். அவள் இறந்த இடத்தில் ஓர் ஊரை அமைத்தார். அதற்கு இராணிப்பேட்டை எனப் பெயரிட்டார். இவ்வூர் இன்றும் அந்த இராணியின் நினைவாக விளங்குகிறது.

### கேள்விகள்

1. தேசிங்கு ராஜன் எந்த நாட்டை ஆண்டார்?
2. ஆர்க்காடு நவாபு தேசிங்குடன் சண்டை செய்யக் காரணமென்ன?
3. மகம்மதுகான் யார்? அவரைப்பற்றி நீ அறிவது யாது?
4. தேசிங்கு இறக்கக் காரணமென்ன?
5. இராணிப்பேட்டை என்ற ஊர் எப்படி ஏற்பட்டது?

### பயிற்சி

1. தேசிங்கு ராஜன் படங்களைச் சேகரியுங்கள்.
2. தேசிங்கு ராஜன் பாடல்களைப் பாடுங்கள்.

# 12. கட்டபொம்மன்

கட்டபொம்மன் நாடகத்தை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? தமிழ் நாட்டின் சிறந்த வீரர்களுள் கட்டபொம்மன் ஒருவன். அவனுடைய முழுப் பெயர் வீர பாண்டிய கட்டபொம்மன். இவன்



வீரபாண்டிய கட்டபொம்மன்

திருநெல்வேலி மாவட்டத்தில் பாஞ்சாலக்குறிச்சி என்ற பாளையத்தை ஆண்டு வந்தான். அவனுக்கு சுதந்திரமாக வாழவேண்டுமென்ற எண்ணம் அதிகம். அவர் குடிமக்களிடம் அதிக அன்பு கொண்டிருந்தார். அவருடைய தம்பியின் பெயர் ஊமைத்துரை.

அப்பொழுது நம் நாட்டுக்கு வந்திருந்த ஆங்கிலேயர் நம் நாட்டு சிற்றரசர்களிடமிருந்து வரி வாங்கினர். கட்டபொம்மனிடமும் வரி கேட்

டனர். ஆனால் அவர் வரி கொடுக்க மறுத்தார். அவனுடைய வீரம் ஆங்கிலேயருக்குத் தெரியும். அவர்கள் கட்டபொம்மனை எப்படியாவது வளைத்துப்பிடிக்க வேண்டுமென எண்ணினர்.

வீர கட்டபொம்மனைப் பிடிக்க ஜாக்ஸன் என்ற கலெக்டர் பல முயற்சிகள் செய்தார். அவருடைய முயற்சிகள் பலிக்கவில்லை. ஆங்கிலேயரது சினம் அதிகரித்தது. பானர்மென் என்பவர் தலைமையில் ஓர் ஆங்கிலேயப் படை பாஞ்சாலக்குறிச்சியை நோக்கிப் புறப்பட்டது. அப்படையில் பீரங்கிகளும் துப்பாக்கிகளும் ஏராளமாக இருந்தன. அவை பாஞ்சாலக்குறிச்சிக் கோட்டைமீது குண்டுமாரி பொழிந்தன. கட்டபொம்மனிடம் துப்பாக்கிகளோ பீரங்கிகளோ இல்லை. அவருடைய தம்பி ஊமைத்துரை அவருக்கு பக்கபலமாக இருந்தார். இருவரின் படைகளுக்கும் அதிகச் சேதம் ஏற்பட்டது.

வீரக் கட்டபொம்மன் படை திரட்ட பாஞ்சாலக்குறிச்சியை விட்டு வெளிச் சென்றார். அவர் புதுக்கோட்டைக் காடுகளில் அலைந்து திரிந்தார். புதுக்கோட்டை அரசனான தொண்டைமான் சூழ்ச்சியாக வீரக்கட்டபொம்மனை ஆங்கிலேயர்களிடம் பிடித்துக் கொடுத்தான். ஆங்கிலேயர் அவனை கயத்தாறு என்னுமிடத்திற்குக் கொண்டு வந்தனர். அவனுக்கு தூக்கு தண்டனை விதிக்கப்பட்டது. அவன் மனம் தளரவில்லை. இடிமுழக்கம் போலப் பேசிக்கொண்டே தானே தூக்குக் கயிற்றை மாட்டிக்கொண்டு வீர மரணம் அடைந்தார்.

கட்டபொம்மனின் புகழும் பெருமையும் பற்றி பல பாடல்கள் பாடப்படுகின்றன. கட்டபொம்மனின் வீரத்தையும் மனஉறுதியையும் பார்த்தீர்களா? அவை நம்மை வியக்கச் செய்கின்றன.

### கேள்விகள்

1. கட்டபொம்மன் யார்?
2. கட்டபொம்மனின் தன்மைகள் யாவை?
3. கட்டபொம்மனுக்கும் ஆங்கிலேயருக்கும் விரோதம் ஏற்படக் காரணமென்ன!
4. கட்டபொம்மன் எவ்வாறு ஆங்கிலேயரால் பிடிபட்டார்?

### பயிற்சி

கட்டபொம்மனைப் பற்றிய பாடல்களைப் பாடு.

---

# 13. ஜான்ஸி இராணி

முன்னர் மத்திய இந்தியாவில் பல சிறு நாடுகள் இருந்தன. அவற்றுள் ஜான்ஸி என்பது ஒன்று. ஒரு சமயம் அதை லட்சுமிபாய் என்ற பெண்மணி ஆண்டு வந்தாள். அவள் வீரம் மிக்கவள்; சுதந்திரத்தில் விருப்பம் கொண்டவள்.

அக்காலத்தில் ஆங்கிலேயர் நம் நாட்டில் அவர்களுடைய இராஜ்யத்தைப் பெருக்கிக் கொண்டு வந்தனர். அப்பொழுது டெல்ஹௌஸி பிரபு கவர்னர் ஜெனரலாக இருந்தார். அவர் லாப்ஸ் கொள்கை என்ற திட்டத்தை ஏற்படுத்தி

னர். அதன்படி ஒரு நாட்டு மன்னருக்குப் பிள்ளை இல்லையானல் அவர் சுவீகாரம் செய்து கொள்ளக் கூடாது எனவும், அவர் இறந்த பின் அந்த நாடு ஆங்கிலேயரைச் சேரும் என்பதுமாகும். இத் திட்டத்தின்படி ஜான்ஸி நாட்டை ஆங்கிலேயர் தம் நாட்டுடன் சேர்த்துக் கொண்டனர்.



ஜான்ஸி இராணி

ஜான்ஸி ராணியான லட்சுமிபாய் கொதித்து எழுந்தாள். ஆவேசம் கொண்டாள். தன் உயிர் உள்ளவரை ஆங்கிலேயருடன் போராடுவது எனத் தீர்மானித்தாள். அவள் போர்க்கோலம் பூண்டாள். போர்தொடுத்தாள். போர்க்களம்

முழுவதும் வாளுடன் சுற்றி வந்து பல ஆங்கிலேயர்களை வெட்டி வீழ்த்தினுள், அவளுடைய உறவினரான தந்தியா தோபே அவளுக்கு உறுதுணையாக இருந்தார். ஆங்கிலேயர் பலர் இறந்தனர்.

ஜான்ஸி ராணிமீது ஆங்கிலேயர் வெடித்த குண்டு பாய்ந்தது. ஜான்ஸிராணி போர்க்களத்தில் வீரமரணம் அடைந்தாள். தந்தியாதோபே ஆங்கிலேயர்களால் தூக்கிலிடப்பட்டார்.

சுதந்திர உணர்வு கொண்ட இந்த இருவரும் தம் தாய் நாட்டிற்காகத்தம் உயிரைத் தியாகம் செய்தனர். என்னே இவர்களது வீரம்!

### கேள்விகள்

1. லட்சுமிபாய் ஆண்ட பகுதி எது?
2. டெல்ஹௌஸி யார்?
3. அவர் கடைப்பிடித்த திட்டம் யாது?
4. லட்சுமிபாய் போர்தொடுக்கக் காரணமென்ன?
5. தந்தியாதோபே என்பவர் யார்? அவருக்கு ஏற்பட்ட முடிவு என்ன?

### பயிற்சி

ஜான்ஸி இராணியின் படங்களைச் சேகரியுங்கள்.

# 14. மகாத்மா காந்தி

நமது நாட்டில் தோன்றிய உத்தமர்களில் மகாத்மா காந்தியும் ஒருவர். இவர் கி. பி. 1869 ஆம் ஆண்டில் போர்பந்தர் என்ற இடத்தில் பிறந்தார். அவருடைய தகப்பனுர் பெயர் கரம்சந்த் காந்தி; தாயார் பெயர் புட்லி பாய். இவருக்கு பெற்ருேர் இட்ட பெயர் மோஹனதாஸ்கரம் சந்த் காந்தி என்பதாகும்.



சிறுவன் காந்தி

அரிச்சந்திரன், சிரவணன் கதைகள் அவரை மிகவும் கவர்ந்தன. அவர் இளமையிலேயே உண்மை பேசுவதில் விருப்பமுள்ளவர். அவர் பள்ளியில் மாணவராகக் கல்வி பயின்ற பொழுது, அவர் பள்ளிக்கு கல்வித்துறை ஆய்வாளர் வந்தார். அவர் மாணவர்களை சில ஆங்கில வார்த்தைகளைப் பாராமல் (டிக்டேஷன்) எழுதச் சொன்ஞர். அவற்றில் ஒரு வார்த்தையைநமது காந்தி பிழையாக எழுதியிருந்தார். அதைக் கண்ணுற்றஆசிரியர் காந்தியின் காலை இரகசியமாக அழுத்திப் பக்கத்து மாணவனைப் பார்த்து சரியாக எழுதும்படி சாடை காட்டிஞர். ஆஞல் காந்தி அவ்வாறு செய்யவில்லை.

காந்திக்கு இளவயதிலேயே திருமணம் நடந்தது. அவர் மேல்படிப்புக்காக இங்கிலாந்து சென்றார். அங்கு ஒழுக்கம் கெடாது இருந்தார். வழக்கறிஞர் பட்டம் பெற்று இந்தியாவுக்குத் திரும்பி வந்தார். அவர் வழக்கறிஞர் தொழிலை மேற்கொண்டார்.

ஒரு சமயம் அவர் ஒரு வழக்கை நடத்தத் தென் ஆப்பிரிக்காவுக்குச் சென்றார். அங்கிருந்த இந்தியர்களின் நிலையைக் கண்டு மனம் வருந்தினார். அவர்களுடைய நல்வாழ்வுக்காகப் பாடுபட்டார்.

தென் ஆப்பிரிக்காவிலிருந்து காந்தி இந்தியாவுக்கு வந்தார். அவர் இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்டார். அவர் நம் நாட்டின் விடுதலைக்காகப் பலமுறை சிறை சென்றார். அங்கு அவர் பட்ட துன்பங்கள் பல. ஆங்கிலேயர்களுடைய முரட்டுத் தன்மையை தன் சாத்வீகத் தன்மையால் அடக்கினார்.

அவர் பட்ட பாட்டிற்கு பலன் கிட்டியது. கி.பி. 1947ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15ம் தேதி நம் நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்தது. இன்று நாம் சுதந்திர நாட்டின் குடிகளாக வாழ்கிறோம்.

காந்தியடிகள் எளிய வாழ்க்கை நடத்தி வந்தார். தம் கையால் நூல் நூற்பார். கதர் ஆடையையே அணிவார். முஸ்லீம்களையும் பிற மதத்தினர்களையும் அவர் சமமாக நேசித்தார்.

அவர் பின்பற்றிய வழி அறவழியாகும். அவர் தன்னைத் துன்புறுத்தியவருக்கும் இரக்கம் காட்டும் பண்புடையவர். அவருடைய உயர்ந்த பண்புகளைக் கண்டு உலகமே வியந்தது. அவரை எல்லோரும் மகாத்மா காந்தி என அழைத்தனர்.

அவர் 1948 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30 ஆம் தேதி ஒரு வெறியனால் சுட்டுக் கொல்லப் பட்டார். நமக்கு சுதந்திரம் வாங்கித்தந்த தியாகிக்கு இவ்வாறு மரணம் ஏற்பட்டதை அறிந்த இந்திய மக்கள் துயரத்தில் ஆழ்ந்தனர். அவர் மறைவினால் உலக மக்களே துக்கப்பட்டனர்.

### கேள்விகள்

1. காந்தி எப்பொழுது எங்கே பிறந்தார்?
2. காந்தி உண்மை பேசுவதில் விருப்பமுடையவர் என்பதற்கு ஒரு நிகழ்ச்சியை எழுது.
3. காந்தி இங்கிலாந்து சென்றது ஏன்?
4. தென் ஆப்பிரிக்காவில் காந்தி கண்டது என்ன?
5. காந்தியின் குணங்களைக் கூறு.
6. நம் நாடு எப்பொழுது சுதந்திரம் அடைந்தது?
7. காந்தி எவ்வாறு வாழ்ந்து வந்தார்?

### பயிற்சி

1. காந்தியின் படங்களைச்சேகரித்து ஒட்டு.
2. காந்தி பற்றிய பாடல்களைப் பாடு.

# 15. ஜவஹர்லால் நேரு

பிள்ளைகளே! நமது பள்ளிகளில் ஆண்டு தோறும் நவம்பர் மாதம் 14 ஆம் தேதி குழந்தைகள் தினம் கொண்டாடுகிறோமல்லவா? அன்று உங்களுக்கு இனிப்புப்பண்டங்கள் கிடைக்கின்றன அல்லவா? இதுதான் காலஞ்சென்ற நமது நாட்டு முதல் பிரதமரான நேருவின் பிறந்த நாளாகும்.

அவருடைய முழுப்பெயர் ஜவஹர்லால் நேரு என்பது. அவருடைய தகப்பனுர் பெயர் மோதிலால் நேரு; தாயார் பெயர் சொரூபராணி. அவர் அலகபாத்தில் பிறந்தார்.



சிறுவன் நேரு

குழந்தைகள் என்ருல் அவருக்குப் பிரியம் அதிகம். அவர்களுடன் அவர் சிரித்துக் கொஞ்சி விளையாடுவார். ரோஜா மலர் மீது அவருக்கு பிரியம் அதிகம். அதை அவர் சட்டையில் குத்திக் கொள்வார். குதிரைச்சவாரி, பனிக்கட்டியில் சருக்கி விளையாடுதல், விமானப் பிரயாணம் ஆகிய விளையாட்டுக்கள் விளையாடுவார். பட்டாணி ஐஸ்கிரீம்களைக் கண்டால் விடமாட்டார். இவருடைய குழந்தை உள்ளத்தைப் பார்த்தீர்களா?

ஆதலால் இவரைக் குழந்தைகள் "நேருமாமா" என்பார்கள்.

அவருக்கு புத்தகங்களைப் படிப்பதில் பிரியம் அதிகம். அவரே பல புத்தகங்களை எழுதியுள்ளார். அவற்றை நம் நாட்டவர்களும், பிறநாட்டினரும் விரும்பிப் படிக்கின்றனர்.

அவர் உலகில் ஒரு நாடு மற்றொரு நாட்டுடன் போர் தொடங்கக்கூடாது; உலகில் அமைதி நிலவவேண்டும் என்ற விருப்பம் கொண்டவர்.



இவருடைய சேவையால் உலகில் எத்தனையோ நாடுகள் விடுதலை பெற்றுச் சுதந்திரம் அடைந்துள்ளன; எத்தனையோ நாடுகளின் துன்பங்கள் நீங்கியிருக்கின்றன. அவர் நம் நாட்டின் ஒப்பற்ற

பிரதமராக விளங்கினார். உலகிலுள்ள பல நாடுகளுக்கும் வழி காட்டியாக விளங்கினார். அவருக்கு பாரத ரத்னம் என்ற பட்டத்தை நமது குடியரசுத் தலைவர் கொடுத்தார். நேரு புகழுடன் மறைந்து விட்டார். அவர் மனிதர்களுள் ஒரு மாணிக்கமாகத் திகழ்ந்தார். அவர் தன் மகள் இந்திரா காந்தியை வாரிசாக விட்டுச் சென்றுள்ளார். அம்மாது இப்பொழுது நம் பாரத நாட்டின் பிரதமராகப் பதவி வகிக்கிறார். அவருடைய தகப்பனார் சென்ற வழியிலே அவர் நம் நாட்டை நடத்திச் செல்கிறார்.

நேருவைப் போன்று நாமும் தன்னலம் கருதாது நாட்டிற்கு உழைப்போமாக.

### கேள்விகள்

1. நாம் குழந்தைகள் தினம் கொண்டாடுவது ஏன் ?
2. நேருவின் பெற்றோர், பிறப்பிடத்தைக் கூறு ?
3. நேருவின் விருப்பங்கள் யாவை ?
4. உலக நாடுகள் நேருவைப் புகழ்வது ஏன் ?
5. நேருவுக்கு யாரால் எப்பட்டம் வழங்கப்பட்டது ?
6. இந்திராகாந்தி யார் ? அவர் வகிக்கும் பதவி யாது ?

### பயிற்சி

1. நேரு, இந்திராகாந்தி ஆகியோரின் படங்களைச் சேகரியுங்கள்.
2. நேரு பற்றிய பாடல்களைப் பாடுங்கள்.

173895

KTB
308